## நில அளவைச் சபை 2010

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

----------------------

### 1.1 அபிப்பிராயம்

------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட உயர் தகவல்களுக்கும், விளக்கங்களுக்கும் அமைய நில அளவைச் சபை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கணக்குப் பதிவேடுகளை முறையாகப் பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர நில அளவைச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு நடவவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் சபையின் அங்கத்துவப் படிகள் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களுக்கான படிகளுக்காக ரூபா 348,890 தொகையான கொடுப்பனவுகள் ஏனைய படிகளின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ஏனைய சேவைக் கொடுப்பனவுகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.

(ii) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் பிரகாரம் 03 மாதங்களுக்கு குறைந்த முதிர்ச்சித் திகதியினைக் கொண்ட நிலையான வைப்புக்கள் காசும் காசுக்குச் சமமானவைகளுமாக வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும்

சாசுப்பாய்ச்சல் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ரூபா 500,000 தொகையான மாதாந்த நிலையான வைப்பு பெறுமதி விடுபட்டிருந்தது.

### 1.2.2 தொங்கல் கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5850 தொகையான தொங்கல் கணக்கு மீதி ஒன்று ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (i) | 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச் சட்டம் | |
| | 46(i) ஆம் பிரிவு மற்றும் சபைத் தீர்மான இலக்கம் 67.9 | சமாதன நீதவான் ஒருவரினால் கையெழுத்திடப்பட்ட உரிய படிவத்தில் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சில சந்தர்ப்பங்களில் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்படாத முறைப்பாடுகள் தொடர்பாகவும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததனால் அது தொடர்பாக சபை உறுதியான கொள்கை ஒன்றினைக் கடைப்பிடித்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை

---

| | | |
|---|---|---|
| (அ) | II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு மற்றும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினது பணிப்பாளர் நாயகத்தின் 2009 சனவரி 06 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ/35/4/391 ஆம் இலக்க கடிதம் | 2009 ஆம் ஆண்டின் சனவரி மாதத்திலிருந்து சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்படும் வரை உரிய பதவிக்கான தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர் ஒருவரை பதில் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2009 சனவரி மாத்திலிருந்து வெற்றிடமாகவிருந்த சபைச் செயலாளர் பதவி 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அந்த வெற்றிடம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரைச் சேர்த்துக்கொள்வதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தலைவரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | சபையின் உத்தியோகத்தர்களால் பொது 169 படிவம் பூர்த்திசெய்யப்பட்டு வைத்திய அறிக்கை வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | II ஆம் அத்தியாயத்தின் 10.10 ஆம் உபபிரிவு | சபையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் உண்மையான பிரதிகள் என்பதற்கு உரிய நிறுவனத்தினால் சான்றுபடுத்தப்பட்டு தனிப்பட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii) சுற்றுநிருபம்

--------------------

| | |
|---|---|
| (அ) 2004 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய பீஈடீ 25(1) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பந்தி | சபையின் ரூபா 1,500,000 தொகையான மிகை நிதி 2010 திசெம்பர் மாதத்தின் போது நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் அதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 2007 மே 11 ஆந் திகதிய 09/2007/01 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | |
| (i) II ஆம் பிரிவு | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நியமன அதிகாரியினால் சிபார்சுசெய்யப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட இலிகிதர் பதவி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) III ஆம் பிரிவு | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல் 12 மாத காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அமைச்சு செயலாளரினால் இலிகிதர் பதவியில் சேவையில் ஈடுபடுத்துதல் 3 ஆண்டுகள் அதாவது 62 வயது வரையும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (iii) 2(vi) ஆம் பிரிவு | இரண்டாந் தர பதவிகளுக்குரிய உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தில் இறுதியாகக் கிடைத்த சம்பளத்தில் 50% அல்லது ரூபா 10,000 |

ஆகிய இரண்டில் அதிக தொகையினை மாதாந்தப் படியாகச் செலுத்த வேண்டிய போதிலும் நிலஅளவைச் சபையினால் உரிய உத்தியோகத்தர்களுக்காக ரூபா 20,000 மாதாந்தப் படி ஒன்று அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவுகள் இடம்பெற்றிருந்தன.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------------------------------

### 2.1 நிதிசார் மீளாய்வு

---------------------------

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாடுகள் ரூபா 1,580,073 பற்றாக்குறையினைச் விளைவித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,680,422 ஆக இருந்ததனால் ரூபா 3,260,495 ஆக 206.35% ஆல் நிதிசார் விளைவுகளில் வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியிருந்தது. 2010 ஆம் ஆண்டு தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவுப் பத்திரக் கட்டண வருமானம் 2009 ஆம் ஆண்டின் வருமானமாக கணக்குவைத்தல் இதற்கு பிரதான காரணமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுதலின் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 37(அ) பிரிவு

---------------------

நில அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கிடையே தொழில் ரீதியான நன்நடத்தைகளைப் பேணுவதற்காக நில அளவை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதிகாரம் அளிக்கப்படாத நபர்களினால் தயாரிக்கப்பட்ட நில அளவைப் படங்கள் மற்றும் நில அளவையாளர்களின் துர் நடத்தைகள் தொடர்பான முறைப்பாடுகளுக்காக

மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த முறைமை கீழே தரப்படுகின்றது.

| | |
|---|---|
| 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாதிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 41 |
| முறைப்பாட்டுப் பதிவேடுகளின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்காகக் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 55 |
| | ------- |
| தீர்த்து வைக்கப்பட வேண்டிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 96 |
| 2010 ஆம் ஆண்டின் போது தீர்த்துவைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 56 |
| | ------- |
| 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வுகள் கிடைக்கப்பெறாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 40 |
| | === |

(ii) நிலஅளவை அதிகாரச் சட்டத்தின் 37(ஈ) மற்றும்(உ) பிரிவுகளின் பிரகாரம், நில அளவைத் தொழில் சம்பந்தமாக தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான பரீட்சைகளை நடாத்துதல், கற்கைகள், பயிற்சி, ஏற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்களில் சம நிலைமையினைத் தோற்றுவிப்பதற்காக வெளிநாடுகளிலுள்ள அதிகாரிகளுடன் இணக்கப்பாட்டினை உருவாக்கிக் கொள்ளல் ஆகிய விடயங்கள் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றினை நிறைவேற்றுவதற்காக எதுவித வேலைத் திட்டமும் இனங்காணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. நிலஅளவை உத்தரவுப்பத்திரங்களைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் திணைக்களத்தில் பயிற்சிகளையும் அனுபவங்களையும் பெற்றுக் கொண்டுள்ளமையால் அவ்வாறான தேவைப்பாடு காணப்படவில்லை என தலைவர் எனக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

## 2.3 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 60 நில அளவையாளர்களை பதிவு செய்து கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த அதேவேளை மீளாய்வாண்டின் போது 69 நில அளவையாளர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தார்கள். 2009 ஆம் ஆண்டின் போது இலக்கு 170 ஆக இருந்ததுடன் பதிவுசெய்து கொண்ட நில அளவையாளர்களின் எண்ணிக்கை 60 ஆகும்.

(ii) சபை கூட்டிணைந்த திட்டத்தினைத் தயாரிக்கும் போது 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் காணப்பட வேண்டிய சில பகுதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

உதாரணமாக :- கடந்த மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு பெறுபேறுகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இலக்குகளை அடைந்துகொள்ளும் செயல்முன்னேற்றத்தினைக் காட்டும் குறிக்கோளுடன் ஆண்டின் இறுதியில் செயல் நடவடிக்கைத் திட்டம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 யூலை 19 ஆந் திகதிய ஆ/8/2/720/272/3 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் கடிதத்தின் மூலம் 2007 திசெம்பர் 31 ஆந் திகதிவரை மாத்திரம் உபகுழுக் கூட்டங்களுக்காக படிகள் கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் முறைப்படியான அங்கீகாரமின்றி 2008 சனவரி மாதத்திலிருந்து 2010 திசெம்பர் மாதம் வரை உபகுழுக் கூட்டங்களுக்கான படிகள் மற்றும் அங்கத்தவர்கள் மூன்று பேருக்கான போக்குவரத்து படிகளாக முறையே ரூபா 79,500 மற்றும் ரூபா 110,288 செலுத்தப்பட்டிருந்தன.

(ii) பதிவுசெய்யப்பட்ட நில அளவையாளர்களின் பெயர் பதிவேடு ஒன்று சபையினால் பேணப்பட்டிருந்தும் அப்பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிராததன் காரணமாக தற்பொழுது தொழிலில் ஈடுபட்டு நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற மற்றும் மேற்கொள்ளாத பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 2.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2005 யூலை 01 ஆந் திகதிய பீஈடீ 31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆகக் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிற்காக சபையினால் இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 2.6 பாதீடு

2010 ஆம் ஆண்டில் சபை தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டிற்கும் உள்ளபடியான தரவுகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் அவதானத்திற்கு கொண்வரப்பட்டதுடன் பின்வரும் அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

I. தனிப்பட்ட கோவைகளைப் பேணுதல்

II. உள்ளகக் கணக்காய்வு

III. கணக்கேடுகளைப் பேணுதல்

IV. முதலீட்டு வட்டி